**தலைப்பு 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட

மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நுகர்வுப் பொருளாக இனங்காணக் கூடிய மிகவும் குறைந்த பெறுமதியுடைய பொருட்கள் பல வருட காலமாக நிதியல்லா சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தது. | இலக்கம் 02/2019 மற்றும் 2019 யூன் 04 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை மூலம் 04/2018 சுற்றறிக்கை 03 மற்றும் 04 ஆம் பந்தி நீக்கப்பட்டுள்ளமையால் நிதியல்லா சொத்துக்களுக்கான எல்லைக்கு உரித்தில்லாதிருந்தது. | நுகர்வுப் பொருட்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்விற்குரிய 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டின் போது நிதியல்லாச் சொத்துப் பதிவேட்டில் அகற்றப்படாதி ருந்ததுடன் அந்த சொத்துக்கள் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்களில் உள்ளடங்கியிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மை ஆய்வுக்குரிய அகற்றப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் Cigas நிகழ்ச்சித்திட்டத்தில் இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 262/2017 மற்றும் 2017 திசம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கை 4 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 இன் பின்னர் ஓய்வு பெறல் அல்லது மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டி எந்தவொரு கடன் தொகையும் முற்பணம் பீ கணக்கில் காண்பிக்காதிருப்பதற்கு நிறுவனத் தலைவர் கவனத்திற் கொள்ள வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தில் மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத் தர்கள் இருவரிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 352,311 அறவிடப்படாமல் முற்பணம் பீ கணக்கில் காண்பிக்கப் பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர்களின் மரணப் பணிக்கொடைகளைச் செலுத்துவதற்காக உரிய ஆவணங்கள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் மரணப் பணிக்கொடையிலிருந்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு முற்பணம் ‘பீ’ கணக்கின் நிலுவை கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன் தீர்த்துவைக்க வேண்டியிருந்ததுடன் மேலும் தீர்த்துவைக்கப் படாத கடன் மீதிகள் தாமதமின்றி அறவிடப் படல் வேண்டும். |

**(இ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **நிலையான சொத்துப் பதிவேடு** | | |
| 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 | அகற்றப்பட்ட சொத்துக்கள் Cigas நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் |

| | | |
|---|---|---|
| என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் மொடியுள் மூலம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மொடியுலின் மூலம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பொலன்னறுவை புலத்திசிபுர விடுமுறை விடுதியில் தங்கியதற்காக 3 – 5 வருடங்களுக்கிடையிலான காலம் முதல் சனாதிபதி அலுவலகத்தில் இருந்து திணைக்களத்திற்கு ரூபா 340,200 அறவிட வேண்டியிருந்த போதிலும் அந்த தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை. | சானதிபதி செயலகத்துடன் தொடர்ச்சியாக தொடர்பினை ஏற்படுத்தி அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மூலதன செலவின விடய இலக்கம் 311-1-1-1-2506(ii) இன் கீழ் உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 20,000,000 தொகையில் 99 சதவீதம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படா மல் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட் டிருந்தது. சரியான திட்டத்தின் பிரகாரம் தேவையான நிதி ஏற்பாடு ஒதுக்காமை இந்த நிலைமைக்கு நேரடியான காரணமாக இருந்தது. | லோலுகஸ்வெவ மீள் குடியமர்த்தல் அமுல்படுத் தும் செயற்திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான ஆலோசனையாளர்களைத் தெரிவு செய்வதற்காக இந்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்காக ஆலோசனையா ளர் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்காக | மிகுதி நிலைமைகள் தொடர்பாக உரிய ஆய்வினை மேற்கொண்டு பொருத்தமான திட்டத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடை ஒதுக்கிக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டில் இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்திற்குச் சொந்தமான 14 வாகனங்கள் காணப்பட்டதுடன் ஆண்டில் அந்த வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,820,973 செலவினமொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரையில் திணைக்களத்தின் நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஓட்ட நிலையில் காணப்படுகின்ற வாகனம் காணப்படாதிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தால் வழங்கப்பட்ட கிரய அறிக்கை மற்றும் நிதி கூற்றுக்களில் வாகனப் பராமரிப்பு கிரயத்திற்கிடையே ரூபா 1,252,217 மற்றும் எரிபொருள் கிரயத்திற்கிடையே ரூபா 464,246 வேறுபாடு அவதானிக்கப் பட்டது. | ஓட்ட நடவடிக்கைகளுக்காக பொருத்தமான நிலைமையில் 09 வாகனங்கள் மாத்திரமே காணப்படுவதுடன் மிகுதி 05 வாகனங்கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. அந்த 09 வாகனங்களில் சில சந்ர்ப்பங்களின் போது பழுதுபார்த்தல் நிலைமையிலும் காணப்படு கின்றது. எதிர்காலத்தில் சரியான அறிக்கை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதியை உள்ளடக்குதல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது 05 செலவின விடயங்களுக்கு ஏனைய செலவின விடயங்களில் இருந்து ரூபா 4,156,100 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 17 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவினங்களை சரியாக இனங்கண்டு மதிப்பீடு செய்யப் படாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது. | போதியளவான நிதி எற்பாடு ஒதுக்கப்படாத 07 செலவின விடயங்களுக்காக ரூபா 11,406,100 நிதி ஏற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டுள்ளது. | செலவினங் களை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்றைத் தயாரித்து அது பேணிச் செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப் படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வ மாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்குமாயின் அந்த மீளாய்வனை மேற்கொண்டு எழுத்து மூலம் அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறான மீளாய்வொன்று மேற் கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் மும்மாத நிதி மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டம், நிதிச் செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதுடன் இந்தக் கூட்டங்களுக்கிடையே திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்படுவதுடன் அதன் பிரகாரம் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. கூட்ட அறிக்கை, உள்ளக சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள் மூலம் உள்ளக மற்றும் நிதிக் கட்டுப்பாடு இரண்டும் பயனுள்ளதாக அவதானிக்கப்பட்டு உள்ளபடியாக உள்ளமை உறுதிப்ப டுத்தப்படுகின்றது. உள்ளகக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக கடந்த ஆண்டில் விநியோகிக்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கை, கடிதம் மற்றும் கூட்ட அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி அனுப்பப்படாதிருந் ததுடன் எதிர்காலத்தின் போது அந்த அறிக்கை எழுத்து மூலம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் எற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக மீளாய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிக்கையிடல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் அளிக்க வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் | திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்காகவும் பதிலளிக் கப்பட்ட போதும் சில கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கும் போது 1-3 மாதங்களுக்கிடையிலான காலம் எடுத்திருந்தது. எதிர்காலத்தில் குறித்துரைத்த காலப் பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1)(உ) பிரிவின் எற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை. | பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படல் வேண்டும். |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர் வமான திட்டமுறைமையொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்துதல் வேண்டும். | ஆக்கபூர்வமான உள்ளகக் கணக்காய்வு பணிகளை உறுதிப்படுத்தும் வகையில் திணைக்களம் பின்வரும் செயற் பாடுளை மேற்கொள்கின்றது.<br>1. வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல்.<br>2. உள்ளபடியான கூட்டம் உடாக வழிப்படுத்துதல்.<br>3. கணக்காய்வு ஐயவினாக்களை விசாரணை செய்தல் மற்றும் தீர்த்தல்.<br>4. காலாண்டு மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1)(ஊ) பிரிவின் எற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் ஆக்கபூர்வமான செயற்படு நிலை தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர ால் உறுதிப்படுத்துத ல் வேண்டும். |

### 3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை.

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனா ன தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
| (அ) | இலங்கை சனநாய சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாண இலக்கம் 1645 | - | 14 வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப் பட்டிருக்க வில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு உரியதாக இது வரை சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச்செல்லப் பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வாகனம் தொடர்பான சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி - செயலாளரின் 2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் கிரயம் முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் சகல நிதியல்லா சொத்துக்களும் பதிவேடுகளின் கீழ் கொம்ரோலர் ஜனராலுக்கு அனுப்ப வேண்டிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ரோலர் ஜனராலுக்கு அனுப்பவேண்டிய தகவல்கள் ஈ-மெயில் மூலம் அனுப்பப்பட்டுள்ளதுடன் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக அவ் வப்போது கிடைக்கப்பெறுகின்ற சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தகவல்கள் ஈ-மெயில் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பான படிவங்கள் அமைச்சு செயலாளருக்கு பிரதியுடன் கொம்ரோலர் ஜனராலுக்கு கையளிக்கப்பட்டு அதன் மென்பொருள் பிரதி அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**(i) அங்கீகரிக்கப்படாத பொடுப்பனவுகள்**

முறையான அங்கீகாரமின்றி பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்ட அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதுடன் பதவி கலைக்கப்படுகிறது என ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் புனித பூமி சுத்திகரிப்பிற்காக மூதியங்கன அலுவலகத்தில் உத்தியோகத்தர்களுக்கு வாரத்தில் வேலை செய்கின்ற நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.30 வரையான காலத்திற்காக மேலதிக நேரப் படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்ட அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட மேலதிக கொடுப்பனவு செலவினங்கள் திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் 79 சதவீதம் அதாவது ரூபா 5,640,333 ஆக இருந்ததுடன் அவ்வாறு | விடுமுறை தினங்களில் ஊழியர்களுக்கு கணிசமான பணிப்பொறுப்புக்களை மேற் கொள்ளவேண்டி ஏற்படுகின்ற மையால் அந்த தினங்களில் ஊழியர்கள் மேலதிக நேர சேவையாக கருதுவதற்கு ஆர்வம் காண்பிப்பதில்லை. அதனால் விடுமுறை தினம் கட்டாய சேவைப் பகுதியாக பேணிச்செல்லப்பட்டுள்ளது. இதனால் வார இறுதி நாட்களில் மேலதிக நேரம் அல்லாமல் சாதாரண சேவை நேரத்தின் கீழ் நடாத்திச் செல்லப்பட்டுள்ளது. அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பதற்காக பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் சகல ஏற்பாடுகளையும் உள்ளடக்கி உள்ளக சுற்றறிக்கை | முறையான அங்கீகாரமின்றி வாரத்தில் வேலை செய்கின்ற நாட்களுக்காக மேலதிக நேரம் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாரத்தில் சாதாரண வேலை நாட்களின் போது சேவையாற்றுகின்ற காலத்திற்கும் மேலதிக நேரம் செலுத்துவதற்கான தெளிவான அங்கீகாரம் காணப்படவில்லை. | விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப் பட்டுள்ளது. | |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பணி மற்றும் தூரநோக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான பணி தேசிய பௌதீக நிர்மாண கொள்கையொன்று மற்றும் திட்டங்கள் தயாரிப்பதாக இருந்த போதிலும் பல வருடகாலம் கடந்திருந்த போதிலும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படாதிருந் ததுடன் இந்த திணைக்களத்தால் பிரதான நோக்கத்திற்குப் புறம்பாக புன்னிய நிலங்கள் பராமரிப்பு நடவடிக்கைகள், புன்னிய நிலங்களை வெளியிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. புனித நிலங்களை பராமரிப்பதற்காகவும் புனித நிலங்களாக வெளியிடுவதற்காகவும் கணிசமான கிரயம் மற்றும் ஊழியம் செலவிடப்பட்டதுடன் மனிதவள பற்றாக்குறையொன்று திணைக்களத்தில் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பிரதான நோக்கங்களுக்கு புறம்பாக ஏனைய பணிகளுக்கு வளங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2023 யூன் 14 ஆந் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சின் செயலாளர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது,<br>1. புனித பூமி பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் புனித பூமியினை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான பணிகள் அந்த வகையில் மேற்கொள்வதற்கும்,<br>2. தற்போது புனித பூமிகளில் சேவை யாற்றுகின்ற ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் பதவிகள் கலைக்கப்படும் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் அந்த பணிகளுக்குரிய சமய நிலையங்களை நடாத்துவதற்கும் அந்த பணிகளை திணைக்களத்தின் பணியாகக் கருதி நிறைவேற்று வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட் டிருந்தது. | திணைக்களத்தின் செயற்பணி, தூர நோக்கு மற்றும் நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் பொருத்தமான திட்டமொன்று திணைக்களத்தால் தயாரித்து அமுல்படுத்தப்பட ல் வேண்டும். |

## 4.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டதுடன் அது 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற் பாடுகளையும் உள்ளடக்கி இருந்ததுடன் அநேகமான விடயங்களில் திகதி மாத்திரம் மாற்றப்பட்டு காண்பிக்கப்பட்டி ருந்தது. அவ்வாறே அந்த நோக்கங்களில் அநேகமானவை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்திற்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் அங்கீகாரம் பெறப்படா மையினால் மற்றும் பதவியணி யினர் போதியளவில் இல்லாமை போன்ற விடயங்களின் காரணமாகசெயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரதான பிரிவில் தாமதம் ஏற்பட்டமையினால் 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சில பிரிவுகள் மாற்றப்பட்டு 2024 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் தூர நோக்கு மற்றும் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை அடைந்து கொள்வதற்கு முடியுமான பிரகாரம் பொருத்தமான திட்டமொன்று திணைக்களத்தால் தயாரித்து அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 4.3 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1946 ஆம் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராம நிர்மாண கட்டளைச் சட்டத்தின் (269 ஆவது அதிகாரம்) மற்றும் 2000 இன் 49 ஆம் இலக்க நகர மற்றும் கிராம நிர்மாண (திருத்தப்பட்ட) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக நிர்மாண கொள்கை யொன்றை தயாரித்தல் மற்றும் தேசிய பௌதீக திட்டம் தயாரித்தல் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்படவேண்டியிருந்த போதிலும் 2019 இல் தயாரிக்கப்பட்டிருந்த தேசிய பௌதீக திட்டம் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு வெளியிடுதல் 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் மேற் கொள்வதற்கு திட்டமிடப்பட் டிருந்த போதும் அந்த செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட | 2020 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை வழங்கியிருந்த ஆலோசனையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது வர்த்தமானி மூலம் வெளியிடப் பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டங்களை திருத்துதல் 2021 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. சட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் யூன் மாதம் 16 ஆந் திகதி தேசிய பௌதீக நிர்மாண சபை நிபந்தனையின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டி ருந்தது. எனினும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்குமுன் மாவட்ட | சட்டத்தின் பிரகாரம் தேசிய பௌதீக நிர்மாண மற்றும் தேசிய பௌதீக திட்டம் குறித்துரைத்த பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. போதியளவான திட்ட வல்லுநர்களை உள்ளடக்கி பதவியணியினர் மற்றும் நிபுணத்துவ அறிவுடைய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | இணைப்புக் குழுக் கூட்டத்திற்கு தெளிவுபடுத்த வேண்டி ஏற்பட்டமையினால் அதற்காக காலம் எடுத்திருந்தது. | |
| (ஆ) | அனுராதபுரம் புனித நகர பூமியில் குடியிருப்பு பரவுதலை வரையறுத்தல் மற்றும் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக லோலுகஸ்வெவ நகர நிர்மாண செயற்திட்டம் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டு 2024 வரை ரூபா 1,053 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 13.5 மில்லியன் அதாவது 1 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட அலுவலகம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 08 வருட காலம் கடந்திருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு முடியாதிருந்ததுடன் மீள் குடியிருத்தல் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்காக 04 அரசாங்க நிறுவனங்களிலிருந்து ஆலோசனையாளர்களை சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் இந்த நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளாமையின் அடிப்படையில் அந்த பணிகளும் தோல்வியடைந்திருந்தது. | நிதியமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் லோலுகஸ்வெவ புதிய நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மீள் குடியமர்த்தல் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக ஆலோசனை யாளர் நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2025 மே 31 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. | பாதீட்டில் இருந்து ஒதுக்கப்படுகின்ற நிதி எற்பாட்டை உச்ச அளவில் வினைத்திறனாகவம் செயற்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 ஆம் ஆண்டைப் போன்றே 2024 ஆம் ஆண்டின் போதும் மத்திய, ஊவா மற்றும் கிழக்கு போன்ற 3 மாகாணங்களுக்காக பிரதேச பௌதீக திட்டம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு திட்டமிடப்பட்ட வேலைகளும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மத்திய மாகாணத்தின் சிக்கலான சுற்றாடல் ஒன்றுக்காக ஆலோசனைக் கோவையொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. முகாமைத்துவத்தின் நலிவான மேற்பார்வை இதற்கு காரணமாக இருந்ததுடன் திட்டமிடலின்றி பொருந்தாத நிர்மாணங்கள் மற்றும் பொது வசதிகள் முறையாக இல்லாமை மற்றும் சுற்றாடல் பிரச்சினை ஏற்படுவதற்கு அது காரணமாக இருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பௌதீக திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து பூர்த்தி செய்ய முடியாதிருந்தமையால் ஊவாக மாகாண வலய பௌதீக திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. கிழக்கு மற்றும் மத்திய மாகாண வலய திட்டமிடல் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி அடைந்து காணப்படுவதுடன் அதன் திட்டங்கள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பித்து பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பணிகளை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | புனித பூமியாக வெளியிடுவதற்காக புனித பூமியாக கருதப்படுகின்ற பிரதேசத்தில் களப்பரிசோதனை மேற்கொண்டு தேவையான அளவுகோள்கள் பூர்த்தி செய்யப் பட்டிருக்குமாயின் வர்த்தமானியின் மூலம் புனித பூமியாக வெளியிடப்படுகின்றது. மீளாய்வாண்டில் 104 விகாரைகள் புனித பூமியாக வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப் பட்டிருந்த போதும் ஆண்டின் போது அதில் 91 விகாரைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகளை பின்பற்றும் போது சமய நிலைய மொன்றாக வர்த்தமானியின் மூலம் வெளியிடும் பணிகளுக்காக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் எடுக்கின்றது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மத்திய சுற்றாடல் உணர்திறன் பிரதேசங்களுக்காக வழிகாட்டி தயாரிப்பதற்காக நடவடிக்கை களை எடுப்பதற்குரிய உப பணிகள் 15 திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டில் அந்த உப பணிகள் எதுவும் அடையப் பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் உணர்திறன் பிரதேசங்களுக்காக வழிகாட்டிகள் தயாரிப்பதற்குரிய உபாய வழிகள் தயாரிக்கப்படுகின்றது. | மேற்படி |
| (ஊ) | 2023 ஆம் ஆண்டைப் போன்று 2024 ஆம் ஆண்டில் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டில் வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு முன்மொழியப் பட்ட 06 புனித நிலங்கள் 2025 ஆம் ஆண்டின் வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட புனித நிலங்களாக தொடர்ந்தும் பெயரிடப்பட்டிருந்தது. | புனித பூமியினை வர்த்தமானி யில் இடும் பணிகளின் படிமுறைகள் சிலவற்றின் போது அரச நிறுவனங்கள் சிலவற்றில் இருந்து நிறைவேற்றப்படுகின்ற மையால் அதற்காக ஒரு வருடம் சில தடவைகள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. | மேற்படி |

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொம்ரோலர் ஜனரால் இனால் CGO/NFAMS/01/03 என்ற 2024 மே 21 ஆந் திகதிய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு முன் 05 வாகனங்கள் விற்றுத்தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆண்டில் இறுதி வரையிலும் அந்த வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | விற்றுத்தீர்க்கும் நடவடிக்கைகளுக்காக வாகனம் தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழு அறிக்கையின் பிரகாரம் வாகனங்களை விற்பனை செய்தல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை விற்றுத்தீர்க்கும் நடவடிக்கைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தால் சதுர அடி 15054 இற்கான அலுவலக இட வசதிக்காக வருடாந்தம் ரூபா 39,328,876 வாடகை செலுத்தி கட்டிடம் பராமரிக்கப்படுவதுடன் திணைக்களத்தின் நிறைவேற்று | பௌதீக திட்டம் தயாரிப்பதற்கு தொடர்ச்சியான பங்களிப்பை காண்பிக்கின்ற அங்கீகரிக்கப் பட்ட பதவியணியில் இரண்டாம், மூன்றாம் மற்றும் சிரேஷ்ட நிலையின் உத்தியோகத்தர்கள் | வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு முடியுமான பிரகாரம் திட்டமிடல் |

| | | | |
|---|---|---|---|
| | நிலையில் 30 உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் அலுவலக கட்டிடத்தை கூறுபிரிப்பதற்கு உரிய அலுவலக உபகரணங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது. இந்த சொத்துக்களை போன்று பிரதான அலுவலகத்தின் இரண்டாம் மற்றும் நிறைவேற்று நிலையில் 71 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய மொத்த பதவியணியினர் 85 பேர்களுக்கும் தேவையான அளவினை விட அலுவலக உபகரணங்கள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் மொத்த கட்டிடத்தில் 1/3 அளவான இடவசதிகளும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஆகும். காணப்படுகின்ற 142 வெற்றிடங்களுக்கிடையே மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் 02 பதவிகளும், 04 பணிப்பாளர் பதவிகளும் மற்றும் 12 உதவிப் பணிப்பாளர் பதவிகளையும் சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. திட்டமிடல் வல்லுநர்களைச் சேர்ப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களதிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் சேவையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவற்காக அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களை வினைத்திறனாகவும் செயற்தினறாகவும் கட்டியெழுப்புதல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமாக பயன்பாட்டில் உள்ள 17 காணிகள் மற்றும் 18 கட்டிடங்கள் காணப்பட்ட போதும் மதிப்பீடு செய்து பெறுமதி இனங்காணாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது 8 காணிகளும் மற்றும் 11 கட்டிடங்களும் மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 11 காணிகளுக்காக உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் காணியின் திட்டம் / வரைபடத்தைப் பெற முடியுமாக இருந்ததுடன் அதன் பிரகாரம் மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும். அதன் பின்னர் அது தொடர்பான உரித்துறுதி காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ள முடியும். | காணி உரித்துறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மஹியங்கனை சுற்றுலா விடுதி காணப்படுகின்ற நிலத்தில் திணைக்களத்திற்குரியது என கருதுகின்ற எனினும் திணைக்களத்தால் பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்படுத்தப்பட்ட | இந்த கட்டிடத்தின் நிலத்தை தயாரித்தல் மற்றும் மலசல கூடத்தை பழுதுபார்த்து ஏதாவதொரு அளவில் குறைவாக பயன்படுத்துவதை முடிவுறுத்தி சுற்றுலா விடுதியொன்றாக குழுக்களுக்கு வழங்குவதற்கு இந்த ஆண்டில் | திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடமொன்று காணப்பட்டது. | மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டின் போது ஏனைய பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | வேண்டும். |
| (உ) | திணைக்களத்தின் பாவனையில் காணப்படுகின்ற நிதி அமைச்சிற்குரிய இலக்கம் 65-0690 என்ற வாகனம் இந்த திணைக்களத்திற்கு கையேற்பதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலக்கம் 65-0690 என்ற வாகனம் இந்த திணைக்களத்திற்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை குறித்துரைத்த பிரகாரம் கையேற்பதற்கும், கணக்கீடு செய்வதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும் 4 உத்தியோகத்தர்கள் பிணை வைக்காதிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று நாளதுவரைகாக பேணிச்செல்லப் பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்தின் பிணைக் கட்டளைச் சட்டம் நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டி சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணை வைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 891(1) குறிப்பிடப் பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் கள் தொடர்பான பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்லப் படல் வேண்டும். |

### 4.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்காக திணைக்களத்தால் குறித்துரைத்த காலப்பகுதியில் பதிலளிக்கப்படா திருந்ததுடன் அவற்றிற்கு பதில் வழங்குவதற்கு 1 – 3 மாதங்க ளுக்கிடையிலான காலம் எடுத்திருந்தது. | திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் பதிலளிக்கப்பட்ட போதும் சில கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கும் போது 1-3 மாதங்க ளுக்கிடையிலான காலம் எடுத்திருந்தது. எதிர்காலத்தில் குறித்துரைத்த காலப் பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(உ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படல் வேண்டும். |

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தின் இலக்கம் 02/2017 மற்றும் 2017 யூலை 27 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் பூர்த்தி குறிகாட்டிகளை இனங்காணல், பிரதான பணி குறிகாட்டிகளை வெளியிடுதல், நிறுவனத்தின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரை இனங்காணல் போன்ற நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை தொடர்புபடுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் நிலைபேறான பூர்த்தி குறிகாட்டிகளை இனங் காணப்பட்டுள்ளதுடன் அந்த நோக்கங்கள் தொடர்பான சில தரப்பினரை இனங்கண்டு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் சில தொடர்புடைய தரப்பினரை இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலை பேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 287 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 145 ஆனமையால் 142 | பௌதீக திட்டங்களை தயாரிப்பதற்காக நேரடியாக பங்களிப்பு வழங்குகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், திணைக்களத்தின் செயலாற்றலைக் கட்டியெழுப்புவதற் |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்டது. இது குறித்துரைத்த காலப் பகுதியில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய பௌதீக திட்டங்களை தயாரிப்பதற்கு முடியாதிருந்த மைக்கு நேரடியாக தாக்கமளித் திருந்தது. | திட்டமிடல் கலைஞர்களை சேர்ப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமா வெற்றிடமாகக் காணப்படுகின்ற ஏனைய உததியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச நிருவாக, மாகாண சபை கள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு செயலாளரின் இலக்கம் 18/2001 மற்றும் 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நாடு தழுவிய சேவைகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் 05 வருடங்களில் 05 நிலையங் களுக்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும் 05 வருடங்களுக்கு மேல் உத்தியோகத்தர்கள் இடமாற்றலாகிச் செல்லாமல் திணைக்களத்தில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றனர். | தற்போது இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட நாடு தழுவிய சேவையில் உள்ள 07 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதுடன் அதில் இந்த திணைக்களத்தில் 05 வருடங்களுக்கு குறைந்த சேவைக் காலத்தில் உள்ள 05 உத்தியோகத்தர்கள் இருப்பதுடன் இரண்டு உத்தியோகதர்கள் மாத்திரம் 09 மற்றும் 08 வருடங்கள் சேவையாற்றுகின்றனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் இடமாற்றம் மேற் கொள்ளப்படல் வேண்டும். |